(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 210.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 செத்தெம்பர் 19, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1133/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தினைப் பெறும் நுகர்வோர்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(ii) வீட்டுப் பாவனை, அரசாங்க நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், மத நிறுவனங்கள் மற்றும் ஏனையோர் எனும் வகைகளின் கீழுள்ள இ.மி. சபையின் நுகர்வோர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) மொத்த உற்பத்தியின் நூற்றுவீதமாக ஒவ்வொரு நுகர்வொரினதும் மின்சார நுகர்வினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இற்றை வரையிலான கடந்த மூன்று வருடங்களில், (அ) (ii) வகையில் அடங்கும் நுகர்வோர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணத்தினையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கட்டணமாற்றங்களை ஒரு நூற்றுவீதமாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011 சனவரியிலிருந்து இற்றைவரை இ.மி.சபைக்கு ஏற்பட்ட மாதாந்த நட்டத்தினையும்;

(ii) இ.மி.சபைக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நுகர்வோர் வகையும் கொண்டிருந்த பங்களிப்பினை நூற்றுவீதமாகவும் உண்மையான பெறுமதியிலும் வெவ்வேறாகவும்

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1370/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வெலிகம பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் வெலிகம, கப்பரதொட்ட, "தர்ஷன" வில் வதியும் திரு. எஸ்.ரீ.கே. ஜயவீர உள்ளிட்ட சகோதரர்களுக்கு சொந்தமான வெலிகம, கப்பரதொட்ட புதிய காலி வீதியில் 153/1 இலக்கமுடைய தனிகஹவத்த எனும் காணியில் சுமார் 18.235 பர்சஸ் காணித் துண்டொன்று வெலிகம நகர சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி சுவீகரிப்பு இடம்பெற்று அண்ணளவாக ஒரு வருடகாலம் கடந்திருந்தாலும் இற்றைவரை நட்டஈடு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலமாக சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிக்கு மேலதிகமாக திரு. எஸ்.ரீ.கே. ஜயவீர உள்ளிட்ட சகோதரர்களுக்கு சொந்தமான அண்மித்துள்ள காணிகளையும் உள்ளடக்குகின்ற வகையில் வெலிகம நகர சபையினால் தற்போது கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்ட காணிக்கு இற்றவைரை நட்டஈடு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) நட்டஈடு செலுத்தப்படுமாயின் அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்;

(iii) நட்டஈடாக எவ்வளவு பணம் செலுத்தப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (அ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடங்களை அமைப்பதற்காகப் பயன்படுத்திய காணிக்கும் நட்டஈடு பெற்றுகொடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், இந் நட்ட ஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1868/ '11

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத் தொடர்புகள், தகவல்தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) ரெலிகொம் நிறுவனத்தின் நாடுபூராவிலும் உள்ள பிராந்திய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்திலும் பணியாற்றுகின்ற நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மாதாந்தம் பெறுகின்ற சம்பளம், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித்தனியாக யாவை;

(ii) மேற்படி நிறுவனத்தின் ஏனைய நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மாதாந்தம் பெறுகின்ற சம்பளம், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2057/ '11

4\.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனையினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பொறுப்பான தரகர்களின் பெயர்களையும்;

(iii) தரகுக் கட்டணங்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கான செலவினையும்;

(iv) மேற்குறிப்பிட்ட 2 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பங்குத் தரகர் கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தரகுக் கட்டணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் தரப்பட்ட ஒவ்வொரு பங்குகளின் கொள்வனவு அல்லது விற்பனைக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய மற்றும் கொள்வனவு அல்லது விற்பனையிலிருந்து இரண்டு வாரங்களில் சந்தை நிறைவு பெறும் போதிருந்த விலையை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2106/ '11

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை தோட்டத் துறையில் தற்போது செயற்படுகின்ற,

(i) அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, கற்பிக்கப்படும் மொழி மூலத்தின் படி மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகள், மாகாண சபைப் பாடசாலைகள், நவோத்யா பாடசாலைகள் மற்றும் இசுறு பாடசாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் எண்ணிக்கையையும்;

(iv) இரண்டாம் நிலை 1000 பாடசாலைகள் கருத்திட்டத்திற்குரிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடந்த 5 வருட காலத்தில் தோட்டத்துறை மாணவர்களின் 5 ஆம் ஆண்டு, சாதாரண தர மற்றும் உயர் தர பெறுபேறுகள் மாவட்ட மற்றும் வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தோட்டத்துறை மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமைய உருவாக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2288/ '12

6.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹோமாகம பிட்டிபன மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தை நிர்மாணிப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளை சுவீகரித்த அதிகாரம்வாய்ந்த உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iii) மேற்படி காணியில் மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் குடியிருப்பாளர்கள் இருந்தனரா என்பதையும்;

(iv) 1/7 பீ, பிட்டிபன வடக்கு ,ஹோமாகம முகவரியில் 35 வருடங்களாக குடியிருக்கின்ற திரு.எம்.ஏ. அநுரவின் காணியும் மேற்படி நடவடிக்கைக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்ட போது குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுவீகரிக்கப்பட்டுள்ள மேற்படி காணியில் குடியிருப்பவர்களது மின்சாரம் தற்போது துண்டிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இவர்கள் பயன்படுத்திய கிணறு மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி காணிகள் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் எழுந்துள்ள மேற்படி நிலைமைகளின் காரணமாக அங்கு குடியிருந்த ஆட்களின் வாழ்வதற்கான அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

2294/ '12

7.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2000, 2001, 2002, 2003 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மாவட்ட அடிப்படையில் மூடப்பட்ட மத்திய அரசின் மற்றும் மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) ஏதேனும் பாடசாலையொன்று மூடப்படும் போது,

(i) அந்த பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் மாற்று நடவடிக்கை என்ன என்பதையும்;

(ii) கவனத்திற் கொள்ளப்படும் அளவு கோள்கள் எவை என்பதையும்;

(iii) கவனத்திற் கொள்ளப்படும் அளவுகோள்கள் இதுவரை மூடப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011ஆம் ஆண்டுவரை மூடப்பட்ட பாடசாலைகளின் கட்டிடங்கள் இதுவரை ஏதேனும் பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் பயன்படுத்தப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளின் இயல்புகள் மற்றும் அதன் மூலம் சம்பாதிக்கப்பட்ட வருடாந்த வருமானம் யாது என்பதையும்;

(iii) பயனுள்ள நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாத பாடசாலைக் கட்டிடங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைள் என்ன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2785/ '12

8.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் கட்டளைகள் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படாமை தொடர்பில் பிரச்சினைகள் நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளை அமுல்படுத்துதல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 17/2005 இன் மூலம் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி நோக்கங்கள் நிறைவேற்றப்படுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2005.10.05 ஆம் திகதி தொடக்கம் இற்றைவரையில் பிணக்குகள் விசாரிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கட்டளைகளில் குறித்த அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் அமுலாக்கப்பட்டுள்ள கட்டளைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது பற்றிய பின்னாய்வுகள் மேற்கொள்ளபட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1843/ '11

9.

கௌரவ புத்திக பதிரண,— கூட்டுறவு, உள்ளக வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் தம்புல்ல கண்டலம பிரதேசத்திலுள்ள பெறுமதிமிக்க நெற்களஞ்சிய கட்டிடத்தொகுதி பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அரசாங்கத்தின் நெற்கொள்வனவுச் செயற்பாட்டுக்கு களஞ்சிய வசதியின்மை தடையாக இருப்பதால், விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்காக இக் களஞ்சியக் கட்டிடத்தொகுதியை மறுசீரமைத்துப் பயன்னடுத்தலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அவ்வாறாயின் இக் களஞ்சியக் கட்டிடத்தொகுதியை மறுசீரமைத்து நெல் களஞ்சியப்படுத்தலுக்குப் பயன்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறின்றேல் இதை வேறேதேனும் பயனுள்ள நடவடிக்கைக்குப் பயன்படுதத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின் அந்நடவடிக்கை யாது;

(iv) நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்காக அல்லது வேறேதேனும் நடவடிக்கைக்கு இக்கட்டிடங்கள் பயன்படுத்தப்படுமாயின் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2133/ '11

10.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவை இலங்கை பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்விதம் திரட்டப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி செலவுகள் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி போட்டியின் அனுசரணை உரிமையை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டட செலவின் காரணமாக இந்நாட்டுக்கு பயன்கள் கிடைத்தனவா என்பதையும்;

(ii) ஆமெனின், கிடைத்த அத்தகைய பயன்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு விழாவை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்காக செயலாற்றிய குழுவின் அங்கத்தவர் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு அங்கத்தவரினதும் பெயர், பதவி மற்றும் அதற்கான தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2187/ '11

11\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் இயங்காமலிருக்கும் அரசாங்க தொழில் முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அம்முயற்சிகளின் பெயர்களையும்;

(iii) அந்நிறுவனங்களில் தற்போது பணிபுரிந்துகொண்டிருக்கும் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையையும்;

(iv) மேற்படி நிறுவனங்களின் இற்றைவரையான மொத்த நட்டத்தையும்;

(v) அந்நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இயங்காமலிருக்கும் அரசாங்க முயற்சிகள் தனியார்மயப்படுத்தப்படவுள்ளனவா அல்லது மூடப்படவுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அவை இத்தருணத்தில் ஏன் மீள்மூலதனமாக்கப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2295/ '12

12\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போது கல்வி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளக் கருத்திட்டங்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும்

(i) பிரதானமான நோக்கம்;

(ii) ஆரம்பித்த ஆண்டு மற்றும் நிறைவு செய்ய உத்தேசித்துள்ள ஆண்டு;

(iii) மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை;

(iv) வெளி நாட்டு உதவி கிடைக்குமாயின், வழங்கும் நிறுவனம் மற்றும் வழங்கப்படும் தொகை ஆகியவை வெவ்வேறாகவும்; அத்துடன்

(v) அரசு ஒதுக்கியுள்ள பணத்தொகை

யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1876/ '11

13\.

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாகாண வைத்தியசாலையில் 72 மற்றும் 73 ஆம் இலக்க பிணி ஆய்வுப் பணிகள் நடைபெறும் இருமாடிக்கட்டிடத்தின் அத்திவாரம் புதைந்துவருவதன் காரணமாக இக்கட்டிடம் சேதமடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) இக்கட்டிடம் உரிய நியமமின்றி கட்டப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் குறைகூறுகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கட்டட நிர்மாணத்துக்கான ஒப்பந்தத்தை வழங்குகின்றபோது கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா;

(ii) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களை முன்வைத்த நபர்கள் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(iii) இந்த நிர்மாண வேலை வழங்கப்பட்ட ஒப்பந்தகாரரின் பெயர் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பதுளை மாகாண வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாது;

(ii) நிர்மாண ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட்டதா;

(iii) இவ்வைத்தியசாலைக் கட்டட நிர்மாணம் தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை நடத்த நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2134/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ், நட்டத்தில் இயங்குகின்ற ஆடைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஒதுக்கிய பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு நிதி வழங்கப்பட்ட ஆடைத் தொழில்சாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் வழங்கப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) ஆடைத் தொழில்சாலைகளுக்கு நிதி வழங்கிய நிதி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிதி நிறுவனத்தினாலும் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(vi) நிதியைப் பெற்றுக் கொண்ட ஆடைத் தொழிற்சாலைகளினால் இதுவரை செலுத்தப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(vii) தற்போது செலுத்த வேண்டியுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(viii) மேற்படி பணத் தொகைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஒவ்வொரு தொழிற்சாலையும் உருவாக்கியுள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ix) மேற்படி தொழில்சாலைகளில் தற்போது இயங்கிவருகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2188/ '11

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) நாட்டின் மொத்த கொள்கலன் அசைவையும்;

(ii) ஒவ்வொரு துறைமுகத்தின் ஒவ்வொரு கப்பல் நங்கூரமிடப்படும் பிரதேசத்திலும் நாட்டின் மொத்த கொள்கலன் அசைவை தனித்தனியாகவும்;

(iii) ஒவ்வொரு துறைமுகத்திலும் நங்கூரமிடல் பிரதேசத்திலும் இலங்கையில் கையாளப்பட்ட உள்நாட்டு கொள்கலன்களைத் தனித்தனியாகவும்;

(iv) அடுத்த ஐந்து வருடங்களுக்குமான கொள்கலன் அசைவின் முன்கணிப்பையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) இலங்கைத் துறைமுகங்களில் கையாளப்படும் கப்பல் சரக்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவற்றை கையாளுவதற்கான செலவினத்தையும் ஈட்டப்பட்ட வருமானத்தையும் ரூபாய் பெறுமதியிலும்;

(iii) துறைமுக அதிகார சபையினால் ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒவ்வொரு கப்பல் நங்கூரமிடப்படும் பிரதேசத்திலும் கையாளப்பட்ட பொது கப்பல் சரக்குகளின் அளவைத் தனித்தனியாகவும்;

(iv) அதிகப்படியான கப்பல் சரக்கு எங்கிருந்து அனுப்பப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ எம்.எஸ். தௌபீக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2012 மே மாதம் 11 ஆம் திகதிய 1757/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 யூன் மாதம் 19 ஆம் திகதிய 1763/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2012 யூலை மாதம் 13 ஆம் திகதிய 1766/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2012 யூலை மாதம் 19 ஆம் திகதிய 1767/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் தொடர்பில் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2012 யூலை 19ஆம் திகதிய 1767/23ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 ஏப்பிறல் மாதம் 27 ஆம் திகதிய 1755/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2012 மே மாதம் 18 ஆம் திகதிய 1758/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.08.21ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

திவிநெகும சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 13.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— “2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 16.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

17.
ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.
அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.
தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.
காசிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.
ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.
இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.